**Pauper O.P.No.42/2019**

ம**.**சா**.1** சி**.**ஏ**.**சேரன்

30-01-2023 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

நான் முன்பு பம்பு மெக்கானிக்காக வேலை பார்த்தேன். தற்போது எந்த வேலையும் செய்து வரவில்லை. நான் ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்ததால் ஓய்வூதியம் எதுவும் எனக்கு இல்லை. வடவள்ளி புதூரில் என் பெயரில் ஒரு சொத்து உள்ளது. அது 5 செண்ட் நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடமாகும். ஐந்து குடும்பங்கள் அதில் போக்கியத்திற்கு வசித்து வருகின்றனர். அந்த போக்கியத்தை காட்டுவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் ஒரு பத்திரம் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். எனது வங்கிக் கணக்கில் பணம் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிரந்தர வைப்பீடு என் பெயரில் எதுவும் இல்லை. சரவணம்பட்டி, விளாங்குறிச்சியில் உள்ள சொத்து எனது மனைவியின் பெயரில் உள்ளதாகும். அங்குதான் நாங்கள் வசிக்கிறோம் என்றால் சரிதான். அந்த வீட்டையும் இரண்டு குடும்பங்களுக்கு போக்கியத்திற்கு கொடுத்துள்ளோம் என்றால், சரிதான். நீதிமன்றக் கட்டணமாக ரூ.1,04,359/- செலுத்தப்படவேண்டும் என்றால், சரிதான். அந்த தொகையை கட்டுவதற்கு உரிய வருமானம் எனக்கு உள்ளது என்றால், சரியல்ல. அதனை மறைத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை **(5** ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்**)**

1 முதல் 4 எதிர்மனுதாரர்களின்மீது முதலீட்டாளர் நலம் பாதுகாப்பு சட்டத்தின்படி பொருளாதார குற்றப்பிரிவில் புகார் கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். எனது புகாரை போலீசார் பெற்றுக் கொள்ளவில்லை. எனது பேரன் எனது பாதுகாப்பில்தான் உள்ளார் என்றால் சரிதான். எனது பேரன் செயின்ட்ஜோசப் பள்ளி , கோத்தகிரியில் பதினோறாம் வகுப்பு படித்து வருகிறார். வருடாந்திர கட்டணம் எவ்வளவு கட்டி வருகிறேன் என்றால், பணம் கட்டுவதில்லை. அவர்களே கமிட்டியில் பேசி பணம் கட்டுவதிலிருந்து விலக்கு

அளித்துள்ளனர். அவ்வாறு பணம் கட்டாமல் படிக்க வைப்பதாகச் சொல்வது பொய் என்றாலும், மூன்றரை லட்சத்திற்கு குறையாமல் பணம் கட்டி படிக்க வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றக் கட்டணம் செலுத்த போதிய வசதி உள்ளது என்றால், சரியல்ல.

மற்ற எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தழுவிக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை

ஒம்/சி.ஏ.சேரன்,

ஒம்/கே.ராஜசேகர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.